OS. No. 36 /2024

வா.சா : 1

பெயர் : சுந்தரி

நாள் : 22.09.2025

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சிவந்திபுரம் வங்கியில் அடமானம் வைத்த சொத்து எனது சொத்தாகும். அது சண்முக சுந்தரம் பெயரில் உள்ள சொத்து அல்ல. முதல் விசாரணை பத்தி 4 ல் சண்முக சுந்தரத்திற்கு பாத்தியபப்ட்ட சொத்தினை அடமானம் வைத்து தொழிலுக்கு கடனாக வழங்கினேன் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஊர் வடமலை சமுத்திரம் ஆகும். என்னுடன் உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை, நான் ஒரே மகள்தான். எனது திருமணத்தின் போது உடன் இருந்தவர் இசக்கி ஆவார். இசக்கிக்கு சொந்த ஊர் எது என்று எனக்கு தெரியாது, கல்யாணிபுரத்தில் இருந்தார், தற்போது எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது, அவரை விசாரித்தால் திருமணம் நடைபெற்றது பற்றிய விபரம் தெரியும் என்றால் சரிதான். சண்முக சுந்தரம் வசதியானவாரா இல்லையா என்றால் வசதியானவர், அவருக்கு எங்கெங்கு சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. சண்முக சுந்தரம் விட்டுச்சென்ற அனைத்து சொத்துக்களிலும் உரிமையுள்ளதா, இல்லையா என்றால் உரிமையுள்ளது. சண்முக சுந்தரம் மனைவி பெயர் அனுசியா. அனுசியாவை விவாகரத்து செய்துவிட்டதாக சண்முக சுந்தரம் கூறினார். அவ்வாறு சண்முக சுந்தரம் விவாகரத்து செய்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விவாகரத்து ஆகவில்லை என்றால் அனுசியாவிற்கு சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஒரு பெண்மகள், அந்த குழந்தை மருத்துவமனையில் பிறக்கவில்லை. நான் தாய்மை அடைந்திருந்த போது மருத்துவ பரிசோதனை ஏதும் செய்துகொள்ளவில்லை. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள வடமலை சமுத்திர முகவரியான என் வீட்டில் வைத்து குழநதை பிறந்தது. எனக்கு பிரவசம் பார்த்த பெயர் கமலா, அவர் இறந்துபோனார். என்னுடைய குழந்தை பிறப்பை வீ.கே.புரத்தில் பதிவு செய்தேன். சண்முக சுந்தரம்தான் பதிவு செய்தார். கதவு எண் 92 பி என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. சண்முக சுந்தரம் ஆடிட்டராக கேரளாவில் வேலை பார்த்தார், அவர் என்ன படித்துள்ளார், எங்கு படித்தார் என்றாலும் எனக்கு தெரியாது. அவர் ஆடிட்டர் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான். அவர் ஆடிட்டராக இருந்தார் என்பதற்கு என் வீட்டில் எந்த ஆவணமும் இல்லை. அவர் தனியே அலுவலகம் எதுவும்

வைத்திருக்கவில்லை. என் கணவர் இளங்கலை முதலாம் ஆண்டு மட்டும் படித்தவர் என்று சொன்னால் சரியல்ல. சண்முக சுந்தரத்துடன் உடன் பிறந்தவர்கள் ஆடிட்டராக என்று எனக்கு தெரியாது. ஆனால் மூன்று பேரும் சேர்ந்து ஒன்றாக வேலை பார்த்தார்கள், மற்ற இருவரும் என்ன வேலை பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது. கேரளாவில், நானும், சண்முகசுந்தரம் மற்றும் 1, 2 ம் பிரதிவாதிகள் சேர்ந்து கூட்டாக வேலை பார்த்து வந்தோம் என்று முதல் விசாரணையில் கூறியிருந்தால் அது தவறு ஆகும். நான் என்னுடைய முதல் விசாரணையில் மூன்று முகவரியை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சிவகிரி, கதவு எண் 57/58 ல் நிரந்தரமாக குடியிருந்ததற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை. நான் சிவகிரியில் ஒருபோதும் குடியிருக்கவில்லை. வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சிவகிரியில் நிரந்தரமாக முகவரியாக குறிப்பிட்டு இருப்பது தவறு ஆகும். நான் தற்போது குடியிருக்கும் வீடு 2 செண்டு ஆகும், அதில் பராமரிப்பு செலவு எவ்வளவு வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் பாகம் கோரிய வீடு அந்த ஊரிலேயே பெரிய வீடு என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு ஒருமுறை பராமரிப்பிற்காக வெள்ளை அடித்தால் அதற்கு மட்டுமே 2 லட்சம் செலவு ஆகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக ஒருவர் பெயரை குடும்ப அட்டையில் சேர்ப்பதாக இருந்தால், முன்னதாக அவர் பெயர் வேறு ஏதேனும் குடும்ப அட்டையில் இருந்தால் அதை நீக்கிவிட்டுதான் சேர்ப்பார்கள் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : ஒத்தி வைக்கப்படுகிறது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.22 16:32:47 +0530